பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை 27.02.2022 கதிர் 340

## நாளையும் நீண்டநேரம் மின் துண்டிப்பு அமுல்!

நாட்டில் நாளை 5 மணித்தியாலத்துக்கும் அதிகநேரம் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சார உற்பத்திக்குத் தேவையான எரிபொருள் பற்றாக்குறையால் நாளை மின் துண்டிப்பை மேற்கொள்ள அனுமதி 2

## யாழ். பல்கலையில் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு



பேரா. சி.சண்முகதாஸ் பேரா. சி.சிவேசன் பேரா. பி. அபிமன் பேரா. த.திருவரன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் நால்வர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை 2

# தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாதச் சட்டம் எதற்கு?

### உடன் நீக்கப்பட வேண்டும் என்று சிறிதரன் எம்.பி. வலியுறுத்து





**தமிழ் மக்களைச் சாகடிக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் நீக்கப்படாமல் இருப்பது நாட்டுக்கு மிகப்பெரிய அவமானமாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் -கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.**

**இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழ் உறவுகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.** 2

## திருநெல்வேலியிலும் கையெழுத்து வேட்டை



(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்துதிரட்டும் நடவடிக்கை இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று யாழ்., திருநெல்வேலியில் நடைபெற்றது.

திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு முன்பாக காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற 2

## நுவரெலியா சுற்றுலா விடுதியில் கணவன், மனைவி சடலங்களாக மீட்பு!

நுவரெலியாவிலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த தம்பதியினர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

59 வயதான ஆணும், 57 வயதான பெண்ணும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குருநகல், கொகரல்ல 2

## இந்திய மீனவர்கள் 8 பேர் சிக்கினார்கள்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாருக்கும் இரணைதீவுக்கும் இடையில் இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்கள் 2

## ரயில் மோதி ஒருவர் சாவு

களுத்துறை வடக்குப் பகுதியில் கொழும்பு கோட்டையிலிருந்து காலி நோக்கிப் பயணித்த இரவு அஞ்சல் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கைச் சேர்ந்த 28 வயதான ராஜேந்திரம் சனாதனன் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை, களுத்துறை கல்லூரிக்கு முன்பாக சடலம் ஒன்று 2

## தேசிய உதைபந்தாட்ட வீரர் பியூஸ்லஸ் திடீர் உயிரிழப்பு



இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணி வீரரும் மாலைதீவின் கழக அணி வீரருமான பியூஸ் நேற்று மாலைதீவில் உயிரிழந்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்ற இவர், பாடசாலைக் காலத்தில் மத்திய களத்தில் தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இருந்தார்.

(விவரமான செய்தி 07ஆம் பக்கத்தில்)



## தமிழ் மக்களைச் சாகடிக்கும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் இன்று கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் சந்தையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் பல பகுதிகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் நிலையில் இன்று காலை 9.30 மணியளவில் ஸ்கந்தபுரம் பொதுச் சந்தையில் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் பொதுச் செயலாளருமான சுப்பிரமணியம் சுரேன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் பிரதேச அமைப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## நுவரெலியா சுற்றுலா ..



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பகுதியிலிருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா மேற்கொண்ட அவர்கள், விடுமுறையைக் கழிப்பதற்காக நுவரெலியா, கலுகல்ல பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர்.

இதன்போது நேற்றிரவு அவர்கள் உணவு தயாரிப்பதற்காகப் பயன்படுத்திய பாபகியூ இயந்திரத்தை, குளிரிலிருந்து பாதுகாப்பதற்காகத் தமது அறையினுள் வைத்து நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது அந்த இயந்திரத்திலிருந்து வெளியேறிய நச்சு புகை காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலம் இன்று காலை நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டன.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு இதே போன்றதொரு சம்பவம் நுவரெலியாவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய மீனவர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசைப் படகொன்றில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை, கடல் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் கிளிநொச்சி, கிராஞ்சி கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் ஊடாக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## திருநெல்வேலியிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

## ரயில் மோதி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கண்டெடுக்கப்பட்டது எனக் களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ். பல்கலையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்படி, வணிக முகாமைத்துவ பீடத்தின் சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களான கலாநிதி திருமதி சிவாணி சண்முகதாஸ், கலாநிதி சி. சிவேசன் ஆகியோர் சந்தைப்படுத்தலில் பேராசிரியர்களாகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. அபிமன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் துறையின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த. திருவரன் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

## நாளையும் நீண்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்குமாறு இலங்கை மின்சார சபை விடுத்த கோரிக்கைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய, A,B,C ஆகிய வலயங்களுக்கு 4 மணித்தியாலங்களும் 40 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்குட்பட்ட இடங்களில், 5 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com







## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எல்லாவற்றிலும் மூடு மந்திரம்

**இலங்கையின் பொருளாதாரத்தை பொறுத்தவரையில் விடயம் தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது போன்ற நிலைமைதான்.**

**ஆனால் இலங்கையின் பொருளாதாரத்தை நிர்வகிக்கும் தரப்புகள் இன்னும் ஒளித்துப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கின்றன.**

**பொருளாதாரத்தை நிர்வாகிக்கும் – நிர்ணயிக்கும் – நிதி அமைச்சு, மத்திய வங்கி, திறைசேரி போன்றவற்றில் இன்னும் மூடு மந்திர நிலைமை நீடிக்கின்றது. பல விவகாரங்களில் வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை.**

**இதுவும் கூட பல்வேறு பின்னடைவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் பிரதான காரணம் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.**

**நாட்டில் அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்பதுதான் பிரதான பிரச்சினை. எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்கு போதிய அந்நிய செலாவணி கையிருப்பு இல்லை, எல்லாம் கரைந்து விட்டது என்பதுதான் காரணம் என்கிறார்கள். அது புரிகின்றது.**

**ஆனால், அந்நிய செலாவணிக் கையிருப்பின் உண்மை நிலை என்னவென்று கேட்டால், அது தொடர்பில் எந்தத் தெளிவான புள்ளிவிவரங்களும் வெளிப்படுத்தப்படுவதில்லை. எல்லாம் சிதம்பர இரகசியம் பேணப்படுகின்றது.**

**பொருளாதாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பெரும் ஊழல் மோசடி நீடிப்பதாகக் கூறப்படுகிறது. முன்னைய பிணைமுறி ஊழல், மோசடி போல பல விடயங்களில் ஊழல், சுத்துமாத்து, பின்கதவு உழைப்பு, லஞ்சம் என்ற பிரச்சினைகள் நீடிக்கின்றன, பெரிய அளவில் மோசடி தலைவிரித்தாடுகின்றது என்றெல்லாம் குற்றம் சுமத்தப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் களம் அமைத்துக் கொடுப்பது பொருளாதார விவகாரங்களைக் கையாளுவதில் பின்பற்றப்படும் மூடு மந்திர ஏற்பாடுதான்.**

**பொருளாதார நிலைமை பற்றிய புள்ளி விவரங்களைக் கூட – நாட்டின் வர்த்தக நிலைமை குறித்த சிக்கல்கள் சம்பந்தமாக இருந்தால் கூட – ஒரு தோராயமான புள்ளி விவர அடிப்படையிலேயே எதிர்க்கட்சியில் கூட பேச வேண்டிய கட்டாயம்.**

**அந்நிய செலாவணி ஒதுக்கீடு விடயங்கள் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடப்பதால் அவற்றில் லஞ்ச, லாவண்யம் பெருக்கெடுத்து ஓடுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதிக்குத் தருவித்துவிட்டு, அதுதொடர்பான கடன் நிபந்தனைக் கடிதத்துக்குரிய பெறுமதிக்கு இலங்கைப் பணத்தைச் செலுத்தினாலும், அதற்கான அந்நிய செலாவணி ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு வாரங்கள், மாதங்கள் காத்துக் கிடக்க வேண்டியுள்ளது. இதனால் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் பொருள்களை இறக்க இயலாது தடுமாறுகிறார்கள் இறக்குமதியாளர்கள். துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கும் கொள்கலன்களுக்கு கால தாமதக் கட்டணம் வேறு.**

**தமது பொருள்களுக்கான கடன் நிபந்தனை கடிதக் கொடுப்பனவை அந்நிய செலாவணி மூலம் செலுத்தி, தங்கள் கொள்கலன்களை விரைந்து துறைமுகத்திலிருந்து அங்கீகரித்து வெளியே எடுப்பதற்கு லஞ்சத்தை வாரி இறைக்க வேண்டி இருப்பதாக இறக்குமதியாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

**நாட்டின் இன்றைய அந்நிய செலாவணி நிலைமை இதுதான் என உறுதியாக அறிய முடியாத நிலையில் பொருளாதார வல்லுனர்கள் கூட உள்ளனர்.**

**லஞ்சம், ஊழல், மோசடி, முறையற்ற செயற்பாடுகள் இவ்விடயத்தில் தலைவிரித்தாடுகின்றன என்று எரிச்சலோடு குற்றம் சுமத்தப்படும் இந்த விவகாரத்தை, அதில் வெளிப்படைத்தன்மை பேணப்படாமையினால் ஆராய முடியாத நிலை இருக்கின்றது.**

**நாட்டின் நிதி அமைச்சரில் இருந்து, திறைசேரித் தலைவர், மத்திய வங்கி ஆளுநர் வரை எல்லோருமே பதில் சொல்ல வேண்டிய விவகாரம் இது.**

**இந்த நெருக்கடிக் கட்டத்திலாவது விவகாரங்களை வெளிப்படையாகப் பேசி, அறிவித்து முன்னெடுத்தால்தான் ஏதேனும் கொஞ்சமாவது விமோசனம் கிட்டும்.**

# அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடின்றி வழங்க ஏற்பாடு

### அமைச்சர் மஹிந்தனந்த அளுத்கமகே திட்டவட்டம்



அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்குத் தேவையான பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தனந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் முதலாவது கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் உரத்தின் விலை பாரிய அளவில் உயர்வடைந்திருப்பதாலும், இந்நாட்டில் இரசாயன உரத்துக்கான தடையுடன் இணைந்ததாக சந்தையில் காணப்படும் உரத் தொகையை அதிக விலையில் விற்பனை செய்ய வியாபாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் எனவும், எதிர்வரும் காலத்தில் இவ்வாறு உயர்ந்த விலையில் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இந்தப் போகத்திலிருந்து இவற்றை அரசாங்கம் உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குழுவில் அவர் தெரிவித்தார்.

உலக சந்தையில் அதிகரித்துள்ள விலைகளைக் கவனத்தில் கொண்டு விலைகளை ஒழுங்குபடுத்த எதிர்பார்த்திருக்கிறோம் எனவும் அமைச்சர் இந்தக் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

அத்துடன், சேதன உரத்தை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பது என்ற அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

# திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறையில் மூவர் கைது!

இளவாலை பொலிஸ் பிரிவில் வீட்டிலுள்ளவர்கள் வெளியில் சென்றிருந்த வேளை திருட்டில் ஈடுபட்டிருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்சேன்துறை வறுத்தவிளான் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் 53 வயதுடைய தந்தையும் 36 வயதுடைய மகளும் கைது செய்யப்பட்டனர்.

திருட்டு நகைகளை அடகு மற்றும் விற்பனை செய்ய உதவினர் என்ற குற்றச்சாட்டில் தந்தையும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவில் அண்மைக் காலமாகப் பட்டப்பகலில் வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்லும் வேளையில் வீடுடைத்து ஏழுக்கு மேற்பட்ட திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அவை தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அவை தொடர்பில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

உதவிப் பொலிஸ் பரிசோதகர்களான நிதர்சன், கலாவிநோதன் ஆகியோரின் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். சந்தேக நபர்களிடமிருந்து 3 தங்கப்பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர்கள் மூவரும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர்.

# மனைவி இறந்து சில நாள்களில் கணவரும் திடீரென உயிரிழப்பு!

மனைவி இறந்து 18 ஆவது நாள் அவரது கணவரும் உயிரிழந்த விடயம் அந்த குடும்பத்தினரையும் அப்பகுதி மக்களையும் மிகுந்த சோகத்தை ஆழ்த்தியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அராலி மத்தி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

செல்வரத்தினம் பரமேஸ்வரி என்பவர் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 2022.02.07 அன்று உயிரிழந்தார்.

பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிறந்த உடல் ஆரோக்கியத்தோடு இருந்த அவரது கணவர், மகளிடம் உணவு வாங்கி சாப்பிட்டு விட்டு கதிரையில் உட்கார்ந்திருந்தவாறு உயிரிழந்துள்ளார். சிற்றம்பலம் செல்வரத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். திடீர் திடீரென ஏற்பட்ட இந்த இரண்டு மரணங்களும் அந்தக் குடும்பத்தையும் அப்பகுதி மக்களையும் மீளா துயருக்குள் தள்ளியுள்ளன.




# கையெழுத்து போராட்டம் நேற்று வட்டக்கச்சியில்!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் நேற்று (சனிக்கிழமை) வட்டக்கச்சியில் நடைபெற்றது. இதனை ரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் பல பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் நிலையில் வட்டக்கச்சியிலும் முன்னெடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை
27.02.2022

# நகரத்தை பாதுகாக்க பொத்தல் குண்டுகளை தயாரிக்கும் உக்ரைன் நாட்டுப் பெண்கள்



இந்த பெரிய உக்ரேனிய நகரத்தின் மையத்தில், புல் தரையில் பெண்கள் கூட்டம் கூட்டமாக இருந்து ரஷ்ய துருப்புகளின் முன் னேற்றத் தைத் தடுக்கவும், அவர்களிடம் இருந்து வீடுகளையும் வீதி களையும் பாதுகாக்கவும் அவர் கள் வீட்டிலேயே பொத்தல் கள் மூலம் நெருப்புக் குண்டு களைத் தயாரிக் கிறார்கள்.

ஆசிரியர்கள், வழக்கறி ஞர்கள்மற்றும்இல்லத்தரசிகள் ஆகியோர் அடங்கிய பெண் கள் கண்ணாடி பொத்தல்கள், கிழிந்த துணிகள் எரி பொருள் களுடன் சூழ்ந்திருந்தனர்.

இதிலிந்து அவர்கள் எதற் கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. இந்த நகரம் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை. ஆனால் இந்த போரின் தீவிரத்தை அது ஏற்கனவே உணர்ந் திருக்கிறது. இராணுவ மருத்துவமனையில் 400 படுக்கைகள் உள்ளன. அவை கிழக்கு உக்ரேன் முழுவதிலும் இருந்து வந்த காயமடைந்த வீரர் களால் நிரம்பியிருக்கின்றன. இந்த நகர மக்கள் திரள்கின்றனர். ஆனாலும் இதை விரும்பிச் செய்ய வில்லை என அவர்கள் கூறுகிறார்கள்.

# தரையிலிருந்து வானில் தாக்கும் ஏவுகணைகளை உக்ரேனுக்கு அனுப்பவுள்ளதாம் ஜேர்மனி



ஜேர்மனி 1,000 டேங்கர் எதிர்ப்பு ஆயுதங்களையும் 500 ஸ்டிங்கர் தரையிலிருந்து வானில் தாக்கும் ஏவுகணைகளையும் உக்ரேனுக்கு அனுப்பவுள்ளதாக அந்நாட்டு அரசு உறுதி செய்துள்ளது. மோதல் நிகழும் பகுதிகளுக்கு ஆயுத ஏற்றுமதியைத் தடை செய்யும் அதன் நீண்டகால கொள்கையில் பெரிய மாற்றத்தை இந்த நடவடிக்கை காட்டுகிறது.

இந்தச் சூழ்நிலையில், விளாடிமிர் புடினின் இராணுவத்திற்கு எதிராக உக்ரேனை பாதுகாப்பதில் எங்களால் முடிந்தவரை ஆதரவளிப்பது எங்கள் கடமை, என்று ஜேர்மன் அரசுத் தலைவர் ஸ்கோல்ஸ் கூறியுள்ளார்.

# ரஷ்யாவின் தாக்குதல் திட்டத்தை உக்ரைன் முறியடித்துள்ளதாம்

ரஷ்ய படைகளின் தாக்குதல் திட்டத்தை முறியடித்து விட்டோம் என உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட வீடியோ ஒன்றில் கூறியுள்ளதாவது கீவ் நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் எங்களது கட்டுப்பாட்டில் தான் உள்ளது. நகரை பாதுகாக்க முன்வருபவர்களுக்கு ஆயுதங்களை தர தயாராக உள்ளோம். இந்த போரை நிறுத்த விரும்புகிறோம். அப்போது தான் அமைதியாக வாழ முடியும்.

ரஷ்யாவின் தாக்குதல் திட்டத்தை முறியடித்துள்ளோம். போரை எதிர்த்த ரஷ்யர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம். போரை நிறுத்துவதற்கு ரஷ்யாவிற்கு நெருக்கடி கொடுக்க வேண்டும். உங்களிடம், எங்களிடமும், உலகத்திடம் பொய் சொல்பவர்களை நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அமெரிக்க உளவுத்துறை அதிகாரி கூறுகையில், அமெரிக்க அரசின் பாதுகாப்புடன் தலைநகர் கீவை விட்டு வெளியேற உதவி செய்ய தயாராக உள்ளதாக ஜெலன்ஸ்கியிடம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதனை ஏற்க மறுத்த ஜெலன்ஸ்கி, தனக்கு பயணம் தேவையில்லை. ஆயுதங்கள் தான் தேவை எனக் கூறினார்



## ரஷ்ய படைகள் நுழைவதைத் தடுக்க

# தன்னைத்தானே வெடிக்கச் செய்தார் உக்ரைன் நாட்டின் இராணுவ வீரர்



உக்ரைன்மீதுரஷ்யபடைகள் உக்கிரமான தாக்குதலை 3வது நாளாக நடத்தி வருகின்றன.

வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷ்ய படைகள் தாக்கி அழித்துள்ளன.

அதேபோல் உக்ரைன் தங்களை தற்காத்துக் கொள்ள, ரஷ்ய படைகளுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. உக்ரைன் தலைநகரான கீவ் நகரை ரஷ்ய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது.

இந்நிலையில், உக்ரைனுக்குள் ரஷ்ய படைகள் நுழைவதை தடுக்க உக்ரைன் இராணுவ வீரர் ஒருவர் தன்னைத் தானே வெடிக்கச் செய்து பாலத்தை தகர்த்தியுள்ளார். இந்தசம்பவம்பெரும்சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

உக்ரைன் இராணுவ வீரரான விட்டலி ஸ்காகுன் வோலோடிமிரோவிச் என்பவர் கிரிமியா மற்றும் உக்ரைன் நிலப்பரப்பை இணைக்கும் முக்கிய இடமான பாலம் அருகே ரஷ்ய படைகள் நுழைந்து வருவதை கண்டு தப்பிக்க நேரமில்லை என சக வீரர்களிடம் கூறியுள்ளார்.

பின் அங்கு வெடிகுண்டுகளைவைத்து தன்னைத்தானே வெடிக்கச் செய்து பாலத்தை தகர்த்தியுள்ளார்.

இதன்மூலம் பாலத்தின் அருகே ரஷ்ய படை வீரர்களின் மரணத்தை உக்ரைனின் ஆயுதப்படைகள் உறுதி செய்தன. உக்ரைன் வீரரின் செயலால் ரஷ்யர்கள் நுழைவதை பின் தங்க வைத்ததாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தாக்குதலை ‘எல்லாத் திசைகளிலும்’ விரிவுபடுத்த ரஷ்யா உத்தரவு



உக்ரைனுக்கு எதிரான தாக்குதலை ரஷ்யா அனைத்து திசைகளிலிருந்தும் விரிவுபடுத்துகிறது.

ஒரு இடைநிறுத்தத்திற்குப் பிறகு அனைத்து திசைகளிலிருந்தும் ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்கு எதிரான தாக்குதலை மீண்டும் தொடங்கவுள்ளது. உக்ரைன் பெலாரஸில் பேச்சு நடத்த மறுத்ததை அடுத்து, தாக்குதலைவிரிவுபடுத்துவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் சனிக்கிழமை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பேச்சு செயல்முறையை உக்ரைன் தரப்பு நிராகரித்ததையடுத்து, இன்று அனைத்துபிரிவுகளுக்கும்நடவடிக்கையின் திட்டங்களுக்கு ஏற்ப அனைத்து திசைகளிலிருந்தும் முன்னேற உத்தரவு வழங்கப்பட்டது என்று ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் இகோர் கொனாஜென்கோவ் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

ரஷ்ய அரசுக்குச் சொந்தமான செய்தி நிறுவனமான ஸ்புட்னிக் கருத்துப்படி, கியேவ் உடனான பேச்சுகளின் எதிர்பார்ப்புடன் வெள்ளிக்கிழமை பிற்பகல் உக்ரைனில் ரஷ்ய இராணுவ நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துமாறு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டார், ஆனால் உக்ரேனிய தலைமை மறுத்ததை அடுத்து சனிக்கிழமை பிற்பகல் நடவடிக்கை மீண்டும் தொடங்கியது.

உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி (Volodymyr Zelenskyy) அந்நாட்டின் படைகள் ரஷ்ய தாக்குதலை முறியடித்துவிட்டதாகவும், மேலும் வெளியில் இருந்து உதவிக்கு அவர் வேண்டுகோள் விடுத்ததால் போராட்டத்தைத் தொடர்வதாகவும் உறுதியளித்ததையடுத்து தாக்குதலும் பதில் தாக்குதலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கிய்விற்கு உண்மையான சண்டை நடந்து கொண்டிருக்கிறது, என்று Zelenskyy ஒரு வீடியோ செய்தியில் கூறினார், அதில் அவர் ரஷ்யாவை உள்கட்டமைப்பு மற்றும் பொதுமக்கள் இலக்குகளைத் தாக்கியதாக குற்றம் சாட்டினார். நாங்கள் வெற்றி பெறுவோம், என்று அவர் கூறினார்.

சில மணிநேரங்களுக்கு முன்பு, உக்ரைன் ரஷ்யாவுடன் போர்நிறுத்தம் செய்ய மறுக்கிறது என்ற தகவல்களை மறுத்தது, ஆனால் இறுதி எச்சரிக்கைகள் அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை ஏற்க தயாராக இல்லை என்று உக்ரைன் கூறியுள்ளது.

ரஷ்யாவின் தாக்குதலை எதிர்த்துப் போராட உக்ரைனுக்கு 35 கோடி டொலர் மதிப்பிலான புதிய இராணுவ உபகரணங்களை வழங்குவதாக அமெரிக்கா கூறியுள்ளது

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனிலிருந்து மூன்றாவது விமானம் இந்தியர்களோடு டெல்லி வந்தடைந்தது



மாணவர்கள் உள்பட சுமார் பதினாறாயிரம் இந்தியர்கள் யுத்தம் நடைபெறும் உக்ரைனில் சிக்கியிருக்கின்றனர் என கடந்த 24 ஆம் திகதி இந்திய மத்திய அரசு அறிவித்திருந்தது.

அங்கு போர் சூழ்ந்ததும் கடந்த 22 ஆம் திகதி முதல் கட்டமாக எயார் இந்தியா விமானம் மூலம் 240 இந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர். ஆனால், கடந்த 24 ஆம் திகதி போர் தொடங்கியதுமே உக்ரைனின் வான்பகுதி பயணிகள் விமானப் போக்குவரத்துக்கு மூடப்பட்டது. இதனால், அங்கு சிக்கியிருக்கும் ஆயிரக்கணக்கான இந்தியர்களை மீட்பதில் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அதேநேரம் உக்ரைன் வான்பகுதி மூடப்பட்டாலும், அங்கு வசிக்கும் இந்தியர்களை அண்டை நாட்டு எல்லைகளுக்கு வரச்செய்து அங்கிருந்து விமானம் மூலம் மீட்டு வர முடிவு எடுக்கப்பட்டது. இதற்காக சிறப்பு குழுக்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன்படி உக்ரைன் வாழ் இந்தியர்கள் ருமேனியா மற்றும் ஹங்கேரி எல்லைகளுக்கு அழைத்து வரப்படுகின்றனர். பின்னர், அங்கிருந்து அவர்கள் அந்தந்த நாடுகளின் தலைநகரான முறையே புகாரெஸ்ட் மற்றும் புடாபெஸ்டுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அங்கிருந்து எயார் இந்தியா விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இவ்வாறு சென்ற விமானங்களில் முதல் விமானம் நேற்று பிற்பகல் ருமேனியா தலைநகர் புகாரெஸ்டில் இருந்து 219 இந்தியர்களை ஏற்றிக்கொண்டு இந்தியா வந்தடைந்தது. இதில் பெரும்பாலும் மாணவர்களே வந்திருந்தனர். இதைப்போல புகாரெஸ்ட் மற்றும் புடாபெஸ்டுக்கு நேற்று மேலும் 2 விமானங்கள் சென்றன. அவை உக்ரைன்வாழ் இந்தியர்களுடன் இன்று டெல்லி வந்து சேரும் என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் உக்ரைனில் சிக்கியிருந்த மேலும் 240 இந்தியர்களுடன் ஹங்கேரி நாட்டின் புடாபெஸ்ட்டில் இருந்து புறப்பட்ட மூன்றாவது விமானம் இன்று காலை 10 மணியளவில் டெல்லி வந்து சேர்ந்தது. உக்ரைனில் இருந்து மீட்கப்பட்ட தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த மாணவர்கள் சென்னை விமான நிலையத்தை வந்தடைந்தனர்.



## அமைதிக்காக எந்த வழியிலேனும் உதவத்தயார் உக்ரைன் அதிபரிடம் பிரதமர் மோடி உறுதி

ரஷ்ய படைகள் உக்ரைனுக்குள் நுழைந்து முன்னேறிவரும் சூழலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி உதவி கோரியுள்ளார்.

அந்த தகவல்களை டுவிட்டரில் பதிவிட்டிருக்கும் அவர், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் உக்ரைனுக்கு ஆதரவு தருமாறு இந்தியப் பிரதமர் மோடியிடம் கேட்டுக் கொண்டார் என குறிப்பிட்டுள்ளார். ரஷ்யாவின் தாக்குதல் குறித்தும், உக்ரைனின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் மோடியிடம் எடுத்துரைத்தார் எனவும் அவர் கூறியுள்ளார். உக்ரைனின் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது ரஷ்யா தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தனது பதிவில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேநேரத்தில், உக்ரைன் - ரஷ்யா நாடுகளுக்கு இடையே நடக்கும் போரை உடனடியாக கைவிட்டு, இருநாடுகளும் பேச்சுக்கு திரும்ப வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார். மேலும், அமைதியை ஏற்படுத்த எந்த வழியிலாவது பங்காற்ற இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி, தற்போதைய போர் நிலைவரம் குறித்து விரிவாக விளக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து போரால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் உடைமைச் சேதங்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார் என தெரிவிக்கப்படுகிறது.

இரு நாடுகளும் உடனடியாக வன்முறையை கைவிட்டு, பேச்சுக்கு திரும்ப வேண்டும் என வலியுறுத்திய மோடி, அமைதியை நிலைநாட்ட இந்தியா தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். உக்ரைனில் இருக்கும் இந்தியர்கள் குறிப்பாக இந்திய மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் பிரதமர் மோடி தனது கவலையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்த உரையாடலின்போது இந்தியர்களை பத்திரமாகவும், விரைவாகவும் அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொண்ட உக்ரெய்ன் அதிகாரிகளுக்கு தனது பாராட்டுகளையும் அவர் தெரிவித்துக் கொண்டார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## போலியோ சொட்டு மருந்து வழங்கல் தமிழகத்தில் இன்று சிறப்பு நடவடிக்கை



தமிழகம் முழுவதும் 43,051 இடங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் இன்று நடைபெற்றுள்ளன. 5 வயதிற்குட்பட்ட 47.36 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு இலக்கு நிர்ணயித்து இன்றைய சிறப்பு முகாம்களை நடத்தியுள்ளது.

பெருநகர சென்னை மாநகரில் 5 வயதிற்கு உட்பட்ட சுமார் 6.68 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து கொடுப்பதற்கு 1,647 சொட்டுமருந்து மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நலவாழ்வு மையங்கள், அரசு மருத்துவமனைகள், பாடசாலைகள், மருந்தகங்கள், சத்துணவு மையங்கள், தனியார் மருத்துவமனைகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் சொட்டு மருந்து மையங்களும் மெரினா கடற்கரை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையங்களில் நடமாடும் சொட்டுமருந்து வழங்கும் இடங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கல் பற்றி தகவல் வழங்கிய தமிழக பொதுச் சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம், தமிழகத்தில் கடந்த 18 ஆண்டுகளாகவும், இந்தியாவில் 2011 ஆம் ஆண்டு முதலும் போலியோ நோய் ஏற்படவில்லை. எனினும் போலியோ வைரஸ் பாதிப்பதற்கான வாய்ப்பு அதிகம்தான்.

இன்றளவும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகளிலேயே இன்னும் போலியோ ஒழிக்கப்படவில்லை. வைரஸ் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பரவுவது எவ்வளவு சுலபம் என்பதை கொவிட் நோயினால் நாம் உணர்ந்திருக்கிறோம். எனவே போலியோ சொட்டு மருந்தை 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தவறாமல் நாம் கொடுத்தாக வேண்டும். இதற்கு முன் எத்தனை முறை கொடுத்திருந்தாலும் மீண்டும் கொடுக்க வேண்டும், என்று தெரிவித்திருந்தார்.

## தமிழகத்தில் கொரோனாவின் தினசரி பாதிப்பு 500 க்கும் கீழாகக் குறைவடைந்ததாக அறிவிப்பு

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு வெகுவாக குறைந்துள்ள நிலையில், தற்போதைய நிலைவரம் தொடர்பாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை இன்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 480 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. நேற்றைய பாதிப்பு 618 ஆக இருந்த நிலையில் இன்று மேலும் குறைந்துள்ளது. மாநிலத்தில் கொரோனா உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 34 லட்சத்து 46 ஆயிரத்து 815 ஆக அதிகரித்துள்ளது.

சென்னையில் நேற்று 156 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் இன்று 126 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. கோவையில் 72 பேருக்கும், செங்கல்பட்டில் 55 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 20 மாவட்டங்களில் ஒற்றை இலக்கத்தில் புதிய பாதிப்பு பதிவாகி உள்ளது. இன்று ஒரே நாளில் 1,464 பேர் சிகிச்சைக்கு பின் வீடு திரும்பியுள்ளனர். இதனையடுத்து, தமிழகத்தில் கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 34 லட்சத்து மூவாயிரத்து 402 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பினால் இன்று இருவர் உயிரிழந்துள்ளமையையடுத்து, கொரோனாவுக்கு பலியானோர் எண்ணிக்கை 38,002 ஆக உயர்ந்துள்ளது.

# மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

## அமைச்சரின் எடுபிடிகள் அட்டகாசம்

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி சேகரிக்கச் சென்றவேளை தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலட்சுமனன் தேவப்பிரதீபன் (நாராயணன்) என்ற ஊடகவியலாளரே நேற்றுக் காலை தாக்குதலுக்குள்ளாகி செங்கலடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வந்தாறுமூலை சந்தைப் பகுதியில் விபத்தொன்றில் உயிரிழந்த சமூக சேவையாளர் அமரர் க.பாஸ்கரன் என்பவரது பெயரில் உறவினர்களால் ஞாபகார்த்தமாக 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பஸ் தரிப்பிடம் கட்டப்பட்டு உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதனைதமிழ்தேசியகூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். கே.துரைராஜசிங்கம் மற்றும் செங்கலடி பிரதேசசபை, இலங்கை போக்குவரத்து சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகிய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு பணிப்பாளர் வசந்த ராஜா ஆகியோர் வைபவ ரீதியாக திறந்து வைத்துள்ளனர்.

இக் கட்டடம் கடந்த 3 நாள்களுக்கு முன்பு 24 ஆம் திகதி இராஜங்க அமைச்சரின் ஊடக இணைப்பாளர் சா.ஜசோ மற்றும் சதமதன் ஆகியோராலும் வேறு சில ஆதரவாளர்களினாலும் பாரிய இயந்திரத்தின் உதவியுடன் உடைக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளது. வெளியூர் சென்றிருந்த உறவினர்கள் ஊர் திரும்பிவந்து பார்த்த போது பஸ் தரிப்பிட நினைவுக் கட்டடம் குறித்த இடத்தில் காணப்படாமையை அறிந்து மனவேதனையடைந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு எதிராக நியாயம் கேட்டு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட முயற்சித்தவர்களை அவ்விடத்திற்கு வருகை தந்த அமைச்சரின் அணியினரான மேற்படி நபர்கள் கலந்துரையாடல் நடவடிக்கையில் ஈடுபட்டமையுடன் போராட்டம் நடைபெறாதவகையில் அதனை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இவ்வேளை ஊடகவியலாளர்களும் பிரசன்னமாகியிருந்தனர். இதன்போது ஊடகவியலாளர் குறித்த சம்பவத்தை வீடியோ எடுக்க தமது கமராவுடன் தயாரனபோது அங்கிருந்த நபர் ஒருவர் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

"எல்லாத்திற்கும்காரணம்நீதான்டா" என்று கூறி சரமாரியாக தாக்கியமையுடன் அச்சுறுத்தலையும் விடுத்தார்.

மொட்டு கட்சி ஆதரவாளரும், இராஜங்க அமைச்சரின் ஆதரவாளரும், கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தருமான வே.நந்தன் என்பவரே தாக்குதலில் ஈடுபட்டவர் எனக் கூறப்பட்டது. அத்துடன் இந்தச் சம்பவத்தைப் படம் எடுத்த நபர் ஒருவரையும் துரத்தி துரத்தி தாக்கியமையுடன் ஏனைய ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தி அட்டகாசத்தில் ஈடுபட்டார்.

இதனால் சக ஊடகவியலாளர்கள் தாம் படப்பிடிப்புக் கருவியைப் பயன்படுத்தி செய்தி சேகரிக்க முடியாத அச்ச சூழ்நிலை காணப்பட்டதாக தெரிவித்தனர். இலங்கையில் ஊடக சுதந்திரமும் ஊடகவியலாளர் சுதந்திரமும் கேள்விக் குறியாக உள்ள நிலையில் தொடர்ந்து இவ்வாறான சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலுடன் தமக்கு தொடர்பு ஏதுமில்லை என்கிறார் வியாழேந்திரன்




"ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இந்த விடயத்தைப் பிழையான முறையில் திரிவுபடுத்தி, இதனை வைத்து யாரும் அரசியல் இலாபம் தேட முயற்சிக்க வேண்டாம்" என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

வந்தாறுமூலை பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பஸ் தரிப்பிடம் ஒன்று அகற்றப்பட்டமை தொடர்பான சர்ச்சை குறித்து செய்தி சேகரிக்கச் சென்றவர் எனக் கூறப்படும் செய்தியாளார் ஒருவர் தாக்கப்பட்டு செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்று இரவே நேரில் சென்று அவரைப் பார்த்து சுகநலன் விசாரித்தார்.

ஊடகவியலாளர் தாக்கப்பட்டமை தொடர்பில் நீதியான விசாரணையினை முன்னெடுக்குமாறு ஏறாவூர் பொலிஸாருக்குத் தாம் ஆலோசனை வழங்கியுள்ளேன் என அந்த ஊடகவியலாளரை வைத்தியசாலையில் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் –

ஊடகவியலாளர்களை என்றும் மதிப்பவன் நான், கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ஊடகவியலாளர்கள்நடத்தியஎத்தனையோ போராட்டங்களில்கலந்துகொண்டுஅவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்தவன் நான். அத்தோடு கடந்த ஆட்சியில் கல்குடா பகுதியில் நிறுவப்பட்ட எதனோல் தொழிற்சாலை தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களான சசிகரன் மற்றும் நித்தியானந்தன் ஆகியோர் தாக்கப்பட்ட போது வீதி வீதியாக இறங்கி அவர்களுக்காக குரல் கொடுத்தது நானும் நான் சார்ந்தவர்களுமே என்பதை யாராலும் மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது.

இந்தச் சம்பவம் தனிப்பட்ட ஒரு குடும்பத்தாரிற்கும் குறித்த கிராமத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் இடம் பெற்றுள்ளதே தவிர, தாக்குதலை நடாத்தியவர் என ஊடகவியலாளர் குறிப்பிடும் மேற்படி கிராம அபிவிருத்தி சங்க உப தலைவர் எமது அலுவலக உத்தியோகத்தரும் கிடையாது, எமது கட்சியின் உறுப்பினரும் கிடையாது. அத்துடன் எனது உத்தியோகத்தர்கள் யாரும் அவரை அந்த இடத்திற்கு அழைத்தும் வரவுமில்லை. ஊடகவியலாளர் தாக்கப்பட்ட அந்த சம்பவத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. இந்த விடயத்தை பிழையான முறையில் திரிவுபடுத்தி, இதனை வைத்து யாரும் அரசியல் இலாபம் தேட முயற்சிக்க வேண்டாம். – என்றார்.

## மெழுகுவர்த்தித் தீயால் சாம்பலான பொருள்கள்

மின்சாரம் தடைப்பட்ட வேளை மெழுகுவர்த்தி ஏற்றிய போது அதன் தீ வீட்டுப் பொருள்களில் பட்டு அவை எரிந்து சாம்பலான சம்பவமொன்று மீராவோடை ஹாஜியார் வீதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றுள்ளது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீராவோடை ஹாஜியார் வீதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமது வீட்டு அறையொன்றில் மெழுகுவர்த்தி ஏற்றிவிட்டு வேறு அறையில் தாம் இருந்த போது மெழுகுவர்த்தி விழுந்து தீப்பற்றியதில் வீட்டுப் பொருள்கள் எரிந்துள்ளன என வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தீயை நேரத்துடன் அவதானித்து உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததினால் பெரும் ஆபத்திலிருந்து தப்பிக் கொண்டோம் என வீட்டு உரிமையாளர்கள் மேலும் தெரிவித்தனர்.



## வலம்புரிச் சங்கை விற்பதற்கு முயற்சித்த நபர் கைதாகினார்!

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிரான் பிரதேசத்தில் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வலம்புரி சங்கு ஒன்றை விற்பனைக்காக எடுத்துவந்த வாழைச்சேனையைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் மாலை தாங்கள் கைது செய்துள்ளோம் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் வழிநடத்தலில் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான குழு சம்பந்தப்பட்டவருக்கு வலை விரித்தது. வலம்புரிச் சங்கை வாங்குவது போல நடித்து அந்தச் சங்கை கிரான்பகுதிக்கு எடுத்துவருமாறு தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபர் வலம்புரி சங்கை விற்பனைக்காக எடுத்துகொண்டு வந்தபோது கைது செய்யப்பட்டார். அவரை வாழைச்சேனை பொலிஸாரிடம் தாங்கள் ஒப்படைத்துள்ளோம் எனவும், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கை தேசிய உதைபந்தாட்ட வீரர் பியூஸ்லஸ் மாலைதீவில் உயிரிழப்பு



இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணி வீரரான டக்ஸன் பியூஸ்லஸ் மாலைதீவில் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்றிருந்தார். பாடசாலைக் காலத்தில் மத்திய களத்தில் தடுப்பாட்ட நுட்பத்துடன் விளையாடும் சிறந்த வீரராக இவர் திகழ்ந்திருந்தார்.

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் இடம் பிடித்த இவர், கால்பந்து உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் தொடரில் இலங்கை தேசிய அணியில் பங்கேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். கடந்த ஆண்டு இடம்பெற்ற சாவ் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், இந்திய அணியுடன் சமநிலையில் முடிவுற்ற ஆட்டத்தில் சிறந்த வீரருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். மாலைதீவில் இவர் தற்கொலை செய்துகொண்டார் எனவும், மரணத்திற்கான காரணத்தை இன்னும் அறிய முடியவில்லைஎன்றும்அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரை கைப்பற்றியது இந்தியக் கிரிக்கெட் அணி



இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது போட்டியில், இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் இலகுவான வெற்றியைப் பெற்று, மூன்று போட்டிகள் கொண்ட தொடரினை இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே 2-0 எனக் கைப்பற்றியிருக்கின்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இலங்கை அணியை அழைத்திருந்தது.

தனுஷ்க குணதிலக 38 ஓட்டங்களையும், தசுன் ஷானக்க 47, பதும் நிஸ்ஸங்க 75 ஓட்டங்களையும் பெற, இலங்கை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைச் சேர்த்தது. இந்திய அணியின் புவனேஸ்வர் குமார், ரவிந்திர ஜடேஜா, சஹல், ஹர்ஷல் படேல் மற்றும் பும்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தியிருந்தனர். அடுத்துக் களமிறங்கிய இந்திய அணி, வெற்றி இலக்கினை 17.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து எட்டியது. ஆட்டமிழக்காது ஸ்ரேயாஸ் அய்யர் 74 ஓட்டங்களையும், ரவிந்திர ஜடேஜா 45 ஓட்டங்களையும் எடுத்து இந்திய அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

இலங்கை அணியின் லஹிரு குமார 2 விக்கெட்டுக்களையும், துஷ்மந்த சமீர ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ஸ்ரேயாஸ் அய்யர் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி இன்று நடைபெறுகிறது.




## ரஷ்யா – உக்ரைன் போர் வேண்டாம் என்று ரஷ்ய டென்னிஸ் வீரர் எழுதியதால் பரபரப்பு

டுபாய் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடரின் அரையிறுதியில் வெற்றிபெற்ற பின்னர், ரஷ்ய டென்னிஸ் வீரர் ரூப்லெவ், ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்த கமரா ஒன்றின் லென்சில் 'தயவுசெய்து போர் வேண்டாம்' என்று எழுதி, ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்புக்கு தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

இது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. டுபாய் சம்பியன்ஷிப் அரையிறுதி ஆட்டத்தில், ரஷ்யாவின் அன்ட்ரே ரூப்லெவ், போலந்தின் ஹூபர் ஹர்காஸை எதிர்கொண்டார். விறுவிறுப்பு நிறைந்த போட்டியில், 3-6,7-5, 7-6 என்ற செட் கணக்கில் ரஷ்ய வீரர் வெற்றி பெற்றார். அதன் பின்னரே குறித்த நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார். உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அந்தநாட்டு வீரர் ஒருவரே போர் வேண்டாம் என்ற செய்தியை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு போட்டியில், செக் குடியரசின் ஜெரி வெஸ்லே, 6-7, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் கனடாவின் டெனிஸ் ஷாபோவலோவை வீழ்த்தினார். இதையடுத்து, டுபாய் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடரில், ரஷ்யாவின் ரூப்லெவ், செக் குடியரசின் வெஸ்லெ ஆகிய இருவரும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.



## 2022 பிபா உலகக் கிண்ணப் போட்டியில் ரஷ்யாவுடன் போலந்து விளையாடாதா

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா படையெடுத்து யுத்தம் புரிந்து வருகிறது. இதற்கு பல்வேறு உலக நாடுகளும் கண்டனக் குரலை எழுப்பி வருகின்றன. இந்த நிலையில் 2022 பிபா உலகக் கிண்ணத் தொடருக்கான பிளே ஓவ் போட்டியில் ரஷ்யாவுக்கு எதிராக விளையாடப் போவதில்லை என போலாந்து நாட்டின் கால்பந்தாட்ட கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீதான படையெடுப்புக்கு எதிராக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. போலந்து நாட்டின் கால்பந்தாட்ட கூட்டமைப்பு தலைவர் Cezary Kulesza இதனைத் தெரிவித்துள்ளார்.

வரும் மார்ச் 24 ஆம் திகதியன்று இரு அணிகளும் ரஷ்யாவின் மொஸ்கோவில் நடைபெற இருந்த பிளே ஓவ் போட்டியில் விளையாடவிருந்த நிலையில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடன், செக் குடியரசு மற்றும் போலந்து ஆகிய நாடுகள் கூட்டாகச் சேர்ந்து ரஷ்யாவில் நடைபெற உள்ள பிளே ஓவ் போட்டிகளை வேறொரு நாட்டிற்கு மாற்றுமாறும் கோரிக்கை முன்வைத்துள்ளன.

முன்னதாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த போர்முலா வன் கார் பந்தய வீரர் செபஸ்டியன் வெட்டலும் ரஷ்யாவில் நடைபெறவுள்ள கிராண்ட் பிரிக்ஸில் தான் பங்கேற்கப்போவதில்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயிருக்கு உயிர் கொடுப்பதே நாட்டின் தாதியர்கள் சேவை!

## சுகாதார அமைச்சர் கெஹலிய எடுத்துரைப்பு



தாதியர் சேவை என்பது உயிருக்கு உயிர் கொடுப்பது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புவெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாதியர் கல்லூரியின் 153 தாதியர்கள் நைட்டிங்கேல் உறுதிமொழி வழங்கி சேவையில் இணையும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போது சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்- உங்கள் வாழ்வில் இது ஒரு பெருமையான தருணம். தாதியர் சேவை என்பது உயிருக்கு உயிர் கொடுப்பது. இது தொழிலுக்கு அப்பாற்பட்ட மனிதாபிமானமாகவே பார்க்கப்படுகிறது. அந்தச் சேவை உலகையே குணப்படுத்துகிறது.

நாடு முழுவதும் உள்ள தாதியர் கல்லூரிகளின் பங்கு மிகவும் முக்கியமானது மற்றும் காலத்துக்கு உகந்தது என்பதை நாங்கள் அறிவோம். நாட்டுக்குத் தேவையான சரியான தாதியர்களை உருவாக்குவதில் அரச தாதியர் கல்லூரிகளின் பணியை நாம் பாராட்ட வேண்டும்.

வாழ்க்கையின் கடினமான தருணங்களில் பலர் உங்களிடம் வருகிறார்கள். எனவே, உங்களின் இந்த சேவையின் மீதான உங்கள் கருணை மிக்க நெருக்கம் மனித குலத்தை அவர்களின் வாழ்க்கையைக் குணப்படுத்தும்.

கொவிட் தொற்றின் ஆரம்ப காலக் கட்டத்தில், சுகாதார சேவையைச் சேர்ந்த அனைவரும் பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றியவர்கள். கொவிட் தொற்றுநோய் முதலில் வந்தபோது நான் சுகாதார அமைச்சராக இருக்கவில்லை. ஆனால் முக்கிய வைத்தியசாலைகளில் முகக்கவசம் இல்லை. பாதுகாப்பு உடைகள் இல்லை.

அதெல்லாம் ஒருபுறம் இருக்க, 3 அல்லது 4 நாள்கள் அல்லது 72 மணிநேரம் தொடர்ச்சியாக பணியாற்றி, அந்த வருவிளைவை எடுத்துக்கொண்ட இந்த நாட்டில் உள்ள தாதியர் குழு, விசேட வைத்திய நிபுணர்கள் முதல் அடிமட்டம் வரை செயற்பட்டவர்கள் பாராட்டப்பட்டமை போதுமா என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது. தங்கள் உயிரை மாத்திரமன்றித் தங்கள் குடும்பத்தினரது உயிரையும் பணயம் வைத்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பணியாற்றிய சகோதர, சகோதரிகளின் குழுவில் இன்று நீங்கள் இணைகிறீர்கள். இது ஒரு வேலையைத் தாண்டி மனித குலத்துக்கான சேவையாகும்.

இங்குள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தநாட்டுமக்களுக்குவாழும்உரிமையை வழங்கிய தலைவர். சுதந்திரம் என்ற சொல்லைப் பரிச்சயப்படுத்திய, எல்லைகிராமங்கள் என்ற சொல்லை நமது அகராதியிலிருந்து நீக்கிய தலை வர். இப்படிப்பட்ட ஒரு தலைவருடன் பணியாற்றும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்துள்ளது.

கொவிட் தொற்றுநோய் இந்த நாட்டுக்கு வந்தபோது, மக்களுக்கு தடுப்பூசி போட வேண்டும் என்ற நம்பிக்கையுடன் நமது ஜனாதிபதி செயற்பட்டார்.

அந்தக் கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றும் வகையில் உலக நாட்டுத் தலைவர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசி எமது நாட்டு மக்களுக்குத் தடுப்பூசியைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். பல நாடுகளில் தடுப்பூசி போடுவதற்கு மக்கள் அரசாங்கத்தை நாடுகிறார்கள். ஆனால் தடுப்பூசி போடுவதற்கு அரசாங்கம் மக்களைப் பின்தொடர்ந்து செல்லும் உலகின் ஒரே நாடு நாங்கள் என்று நினைக்கிறேன்.

சுகாதார நிபுணர்கள் ஆற்றிவரும் சேவையின் மதிப்புக்கு எல்லையே இல்லை என்பது என் இதயத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

# போதுமான எரிபொருள் யாழில் கையிருப்பில்!

## அரச அதிபர் தெரிவிப்பு



பொதுமக்கள் முண்டியடித்து எரிபொருள்களை கொள்வனவு செய்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

எனவே பொதுமக்கள் முண்டியடித்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் பொதுமக்களின் வழமையான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான எரிபொருளை மாத்திரம் விநியோகிக்குமாறு அறிவுறுத்தியுள்ளதோடு ஏனைய பதுக்கல், சேமித்து வைக்கும் முகமான கொள்வனவிற்கு எரிபொருளை விநியோகிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

# நாட்டில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பு பொதுப் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அபாயம்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் எரிபொருள் விலையைத் திருத்தியமைத்துள்ள நிலையில் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வு, எரிபொருள் செலவு மற்றும் பழுதுபார்ப்பு செலவுகள் அதிகரிப்பதால் போக்குவரத்து துறை ஊழியர்களின் வருவாயை நேரடியாகப் பாதிக்கும் என அதன் பொதுச் செயலாளர் அஞ்சனா பிரியஞ்சித் தெரிவித்தார். இதேவேளை ஜூலை மாதம் வரை பஸ் கட்டணத்தை மாற்றியமைப்பதாகத் தாங்கள் ஒருபோதும் அரசாங்கத்துக்கு வாக்குறுதி அளிக்கவில்லை என அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எனவே இதற்குத் தீர்வு வழங்கப்படாவிட்டால், திங்கட்கிழமைக்குள் பொதுப் போக்குவரத்து துறை ஸ்தம்பிக்கும் என அவர் எச்சரித்தார்.

# பெண்களின் முகங்களை நிர்வாண உடல்களுடன் இணைத்து ஒன்லைனில் வெளியாகும் படம்!

இலங்கையில் பதிவாகும் தகவல் தொழில்நுட்பங்களை உபயோகம் செய்து மேற்கொள்ளப்படும் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தினமும் 15-20 முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கின்றன என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூர் சட்ட அமைப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கடந்த ஆண்டு பொலிஸாரால் விசேட சைபர் குற்ற விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டது என்று அஜித் றோஹண கூறினார்.

மேலும் பெண்களே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என தெரிவித்த அவர், பெண்களின் முகங்களை நிர்வாண உடல்களாக சித்திரிக்கப்படும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என கூறினார்.

ஆகவே பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் துன்புறுத்தலுக்கு ஆளானால் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.




# யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு நூலக பஸ்

யாழ்.புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு நூலக பஸ் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் நூலக பஸ் ஒன்று வழங்கிவைக்கப்பட்டது. இலங்கை போக்குவரத்துச் சபையின் பழுதடைந்த பஸ்களைத் திருத்தி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நூலகமாக மாற்றப்பட்டு பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இந்த பாடசாலைக்கு மாத்திரமே நூலக பஸ் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இலங்கை போக்குவரத்து சபை, ஸ்ரீலங்கா ரெலிகொம், தெரண தொலைக்காட்சி ஆகியவற்றின் அனுசரணையில் நடைபெற்ற இந்தத் திட்டம் இலங்கையின் 25 மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2022இல் வெளியிடப்பெற்றது.